**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| **Calendar** | |
| **Miscellaneous** | CC.No. 188/2023 |
| **Preliminary Register** | |
| **Sessions** | |

**DEPOSITION OF WITNESS FOR** Prosecution அ.சா. 2 / Defence / Court

| | |
|---|---|
| **Name** | திருமதி.செல்வி |
| **Father's/Husband Name** | திரு. கருப்பண்ணன் |
| **Village** | கொட்டகை |
| **Taluk** | பெரம்பலூர் |
| **Age** | 39 / 2023 |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 03.01.2024**

**(1ம் எதிரி ஆஜர் 2,3 ம் எதிரிகள் ஆஜர் இல்லை (அவருக்காக கு.வி.ச. பிரிவு 317 ன் கீழ் மனு அளிக்கப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**முதல் விசாரணை :–**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் தனலட்சுமி சீனிவாசன் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றி வருகிறேன். ஆஜர் 1ம் எதிரியை எனக்கு தெரியும். ஆஜர் 1ம் எதிரி எனது கணவரின் அண்ணன். 24.06.2021ம் தேதி நானும் என் கணவரும் கொட்டகை கிராமத்திற்கு சென்றோம். எங்கள் வீட்டு ஜன்னல் சிலாப்பை உடைத்து எங்கள் வீட்டின் மேல் போட்டு வைத்திருந்தார்கள். அது குறித்து ஆஜர் 1ம் எதிரியிடம் நாங்கள் கேட்ட போது எங்கள் பாகத்தையும் சேர்த்து எழுதி கொண்டு வீட்டையும் இடித்து விட்டீர்களே என கேட்டதற்கு ஆஜர் 1ம் எதிரி கம்பியை எடுத்து வந்து என் கணவரின் தலை, கால், கை மீது அடித்து விட்டார்கள். தினேஷ் உருட்டு கட்டையால் என் கணவரை அடித்தார். 1ம் எதிரியின் மனைவி மருதம்மாள் சொல்லத்தகாத வார்த்தையால் கேவலமாக திட்டினார். நான் சென்று தடுத்த போது ரவிச்சந்திரன் செருப்பு காலால் என்னை எட்டி உதைத்து

வலது கன்னத்தில் அறைந்து விட்டார். இந்த பிரச்சனைக்கு எல்லாம் நீ தான்டி காரணம் என்றும், அசிங்கமாக தேவடியா, குச்சிக்காரி என்றும் என்னை ஆஜர் 1ம் எதிரி திட்டினார். இது எங்கள் பாகம் நாங்கள் எழுதி வாங்கி விட்டோம் கோர்ட்டில் போய் பார்த்துகொள்ளுங்கள் என்று ஆஜர் 1ம் எதிரி சொன்னார். என் கணவருக்கு உடம்பெல்லாம் காயமாக இருந்ததால் அரசு மருத்துவமனையில் இரண்டு நாட்கள் இருந்தார். போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

1, 2, 3 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–

அரியலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், அஸ்தினாபுரத்தில் எத்தனை வருடங்களாக குடியிருக்கிறேன் என்றால் 13 வருடங்கள். சம்பவத்தின் போதும் நாங்கள் அஸ்தினாபுரத்தில் தான் குடியிருந்தோம் என்றால் சரிதான். என் கணவர் எழுத்து மூலமாக கொடுத்த புகார் வாக்குமூலத்திலும், அஸ்தினாபுரத்தில் குடியிருப்பதாக குறிப்பிட்டுள்ளார் என்றால் சரிதான். நான் எந்த மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக சேரவில்லை என்றால் சரிதான். நான் கொட்டரை கிராமத்தை சேர்ந்தவர் என்பதற்காக ஆவணத்தை போலீசாரிடமும், நீதிமன்றத்திலும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் போலீசாரிடம் வாக்காளர் அடையாள அட்டையை கொடுத்தேன். அது போன்று ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்பதால் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகள் எங்கள் இடத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளார்கள் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளோமா என்றால் கொடுத்துள்ளேன். என்ன ஆவணம் கொடுத்துள்ளேன் என்றால் ஞாபகமில்லை. எந்த ஆவணமும் நான் கொடுக்கவில்லை பேராசிரியர் என்பதால் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் கூறிய சங்கதிகளை தான் போலீசார் விசாரணையிலும், கூறினேன் என்றால் சரிதான். என்னை அடித்தற்கான சிகிச்சை பெற்ற ஆவணங்களை போலீசாரிடமும், நீதிமன்றத்திலும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் கூறியது போல் போலீசாரிடம் எந்த வாக்குமூலமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. கம்பி, கட்டை போன்ற ஆயுதங்களை போலீசாரிடம் கொடுக்கவில்லை என்றால் கொடுத்துள்ளேன். அந்த ஆயுதங்களை போலீசார் என் முன்னிலையில் மகஜரில் கைப்பற்றி நீதிமன்றத்தில்

தாக்கல் செய்தார்களா என்றால் ஆமாம். நான் சொன்ன தேதியில் கொட்டரை கிராமத்திற்கு நான் வரவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், கொட்டரை கிராமத்தில் வீடு இருப்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யாததால் நான் சொல்வது போல் சொத்தும் இல்லை, ஊருக்கும் நாங்கள் வரவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கு முன்பாக எனது கணவர், எனது மாமனார் பச்சமுத்து, ஆஜர் 1ம் எதிரி மற்றும் அவரது மகன்கள் ஆகியோரின் வழக்கு பெரம்பலூர் முதன்மை உரிமையியல் நீதிமன்றத்தில் OS.No.21/2022 என்ற எண்ணில் நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். OS.No.21/2022 என்ற வழக்கில் என் மாமனார் தினேஷ் மற்றும் அவரது தம்பிக்கு சொத்து எழுதி கொடுத்த பத்திரம் செல்லாது என்று பரிகாரம் கோரியுள்ளோம் என்றால் பாகம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளோம். நான் சொல்வது போல் பாகம் கேட்டு எந்த வழக்கும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் மாமனார் இறந்துவிட்டார் என்றால் சரிதான். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால் சரியல்ல. என் மாமனாரிடம் சொத்து கேட்டு அடித்து அது சம்மந்தமாக போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் சொத்து கேட்டோம் ஆனால் அடிக்கவில்லை. மருவத்தூர் போலீசார் விசாரணை செய்தார்கள். என் மாமனாரை அடித்து கொடுமைப்படுத்தி, செம்பறி ஆடுகளை ஓட்டி கொண்டு, நகைகளை எடுத்து கொண்டதால் தான் என் மாமனார் எங்கள் மீது புகார் அளித்தார் என்றால் இல்லை. என் மாமனார் ஒரு மாதம் மருத்துவமனையில் இருந்தார் என்பது தெரியுமா என்றால் அவர் மருத்துவமனையில் இருக்கவில்லை. நான் அடித்ததால் என் மாமனார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றார் என்றாலும், வெளியில் கடன் வாங்கி அவர் சிகிச்சை பெற்றார் என்றாலும் இல்லை. என் மாமனார் இறந்த தேதி என்னவென்றால் 19.08.2023. மருத்துவ சிகிச்சைக்காக வாங்கிய கடனை அடைக்க சொல்லி 1ம் எதிரிக்கு தன்னுடைய சொத்தில் ஒரு சில அயிட்டங்களை 2023ம் வருடம் ஏப்ரல் மாதம் உயில் எழுதி வைத்தார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. இந்த விவரங்கள் எனக்கும் என் கணவருக்கும் ஏற்கனவே தெரியும் என்றாலும், வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. சம்பவத்தின் போது எதிரி தினேஷ் இல்லை என்றும், பதட்டத்தில் மிகைப்படுத்தி புகார் கொடுத்துவிட்டேன் என்றும், என் கணவர் மறுவாக்குமூலத்தில் போலீசாரிடம

சொல்லியுள்ளார் என்றால் என் கணவர் அவ்வாறு சொல்லவில்லை. ஆளுங்கட்சி எம்எல்ஏ–வான பிரபல கல்வி நிறுவனத்தின் உரிமையாளர் மூலம் மருவத்தூர் காவல் நிலையத்தில் பொய் புகார் அளித்துள்ளேன் என்றால் ( சாட்சி இந்த கேள்வியை எதிரிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர்கள் கேட்ட போது நீதிமன்றத்தை அவமதிக்கும் விதமாக கத்தி பேசினார்) சரியல்ல. ஆஜர் 1ம் எதிரி என்மீதும் என் கணவர் மீதும் புகார் அளித்து நீதித்துறை நடுவர் எண்.2 நீதிமன்றத்தில் CC.133/2022 என்ற வழக்கில் நான் ஆஜராகி வருகிறேன் என்றால் சரிதான். இந்த வழக்கிலிருந்து தப்பிப்பதற்காக என் கணவர் கொடுத்த பொய்யான புகாரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிகளுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.